IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No. 98/2021
Deposition of witness for PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனுசாமி | Caste | : | |
| Father Name | : | மாரிமுத்து | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of April, 2024.

Cross Examination:

1. வழக்கு சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பழைய காட்பாடி. அதன் சர்வே எண். 661 அதில் 6 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரங்களில் 3 உட்பிரிவு சர்வே எண்கள் மட்டும் தெரியும். மீதமுள்ள 3 உட்பிரிவுகள் எனக்கு தெரியாது. அது வேறு நபருக்குரியது. இவ்வழக்கை எந்த விஸ்தீரணத்திற்கு போட்டுள்ளேன் என்றால் 62 செண்ட். வழக்கு சொத்து ஆதியில் சின்னய்யனின் மனைவி சின்னம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி சின்னம்மாள் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர் இறந்த வருடம் 1971. மேற்படி சின்னம்மாளின் கணவர் இறந்து விட்டார். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள். 1. மாரிமுத்து, 2. கோவிந்தன், 3. அர்ச்சுனன். மேற்படி சின்னம்மாள் மற்றும் சின்னய்யாவின் இறப்பு சான்றிதழ்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி மாரிமுத்து என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரின் மனைவி அன்னியம்மாள் இறந்து விட்டார். மேற்படி மாரிமுத்து மற்றும் அவரின் மனைவி அன்னியம்மாளின் இறப்பு சான்றிதழ்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

3. மேற்படி மாரிமுத்துவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 1. ராமலிங்கம், 2. ஜெயவேல், 3. சுலோசனா, 4.முனுசாமி, 5. விஜயா, 6. விஜயரங்கன், 7. நவநீதம், 8. கிருபானந்தம் ஆகியோர் ஆவர். மேற்படி நபர்கள் தான் மாரிமுத்துவின் வாரிசுகள் என்பதற்கு வாரிசு சான்றிதழை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

4. மேற்படி 8 பேரில் நவநீதம் மற்றும் கிருபானந்தம் தற்போது உயிரோடு இல்லை. அவர்கள் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி 2 நபர்களும் திருமணம் ஆன பின்புதான் இறந்து விட்டனர் என்றால் சரிதான். மேற்படி 2 நபர்களின் வாரிசுதாரர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் சேர்த்துள்ளோம். அவர்களில் கிருபானந்தத்தின் வாரிசுகள் 1. பாபு, 2. கோபி, 3. லட்சுமி. நவநீதத்தின் ஒரே வாரிசு குப்பன்.

5. மேற்படி சின்னம்மாளின் 2-வது மகன் கோவிந்தன் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவரது மனைவி பெயர் உண்ணாமலை அவரும் இறந்து விட்டார். அவர்களின் இறப்பு சான்றிதழ்களை இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களின் ஒரே மகன் பிச்சாண்டி என்றால் சரிதான். அவருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் அவருக்கு திருமணம் ஆகி அவரின் மனைவி கங்கம்மாள் இறந்து விட்டார். அவர்களுக்கு வாரிசுகள் இல்லை. அவர்களுக்கு வாரிசுகள் இல்லை என்பதற்கான ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை.

6. மேற்படி சின்னம்மாளின் 3–வது மகன் அர்ச்சுனனின். அர்ச்சுனனின் மனைவி உண்ணாமலை. மேற்படி அர்ச்சுனனும், உண்ணாமலையும் இறந்து விட்டனர். அவர்களின் இறப்பு சான்றிதழ்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். மேற்படி அர்ச்சுனனுக்கும் உண்ணாமலைக்கும் வாரிசுகள் இல்லை என்றால் சரிதான். அவ்வாறு வாரிசுகள் இல்லை என்பதற்கு எந்த ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. 30.05.1958–ல் சின்னம்மாள் என்பவர் வழக்கு சொத்தை பிரதிவாதி மாரிமுத்தம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அது வா.சா.ஆ–1 என்றால் சரிதான். அதன் கிரைய தொகை ரூபாய் 250 என்றால் சரிதான். மேற்படி அதே தேதியில் பிரதிவாதி வழக்கு சொத்தை மேற்படி சின்னமாளுக்கே கொடுத்து விடுவதாக ஒப்பந்தம் போட்டுக் கொண்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1958–ல் எனக்கு வயது 14. அதுதான் இவ்வழக்கில் வா.சா.ஆ–2 என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய்க்காக போடப்பட்டுள்ளது என்றால் ரூ.250. அதன் முன் பணத்தொகை எவ்வளவு என்றால் ரூ. 5. இந்த விவரங்களை எனக்கு யார் தெரிவித்தனர் என்றால் நவநீதம்.

8. மேற்படி விவரங்களை என் அண்ணன் நவநீதம் சொல்லிதான் நான் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ–1–ன் படிக்கு நடந்து கொள்ளவில்லை என்று கோரி மேற்படி சின்னம்மாள் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். எந்த வருடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் 1965. மேற்படி வழக்கு தாக்கல் செய்ததற்கான ஆவணங்களை இவ்வழக்கில்

தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். மேற்படி வழக்கில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் சின்னம்மாளுக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டது.

9. அதன் பிறகு என்ன ஆனது என்றால் பிரதிவாதி தீர்ப்பின் படி நடந்து கொள்ளததால் மேற்படி சின்னம்மாள் நீதிமன்றத்தில் மனு செய்ததின் பெயரில் நீதிமன்றமே சின்னம்மாளுக்கு பத்திர பதிவு செய்து கொடுத்தது. அதில் இருந்து நாங்கள் வழக்கு சொத்தில் அனுபவம் செய்து வருகிறோம். மேற்படி வா.சா.ஆ–2 ற்கான மீதி கிரைய தொகையை நீதிமன்றத்தில் கட்டியுள்ளோமா என்றால் ரூ.245–யை கட்டி உள்ளார். நீதிமன்றம் எழுதி கொடுத்ததாக கூறும் கிரைய பத்திரம் எங்கு உள்ளது என்றால் அது மழையில் வீடு இடிந்து ஆவணம் போய்விட்டது. அதனால் பத்திர பதிவு அலுவலகத்தில் இருந்து சான்றிட்ட நகலை பெற்றுள்ளோம்.

10. மேற்படி அசல் பத்திரம் என்னவானது என்பதற்கு நான் கூறிய மேற்படி சங்கதிகளை இவ்வழக்கில் கூறியுள்ளோமா என்றால் கூறியுள்ளோம். மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதற்கு ஆதரமாக பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய வருவாய் ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

11. நான் கூறுவது பொய் என்றும் வழக்கு சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நீதிமன்றத்தின் மூலம் சுவாதீனம் பெறப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதும் இவ்வழக்கில் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

(Sd/-).. K. Venkatesan

DISTRICT MUNSIF
KATPADI